மார்கழி 2013

இலவசம்

உள்ளான மனிதன்

E-COPY

இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர்
உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.

லூக்கா 2:11

THE INNER MAN

MONTHLY FREE ISSUE – DEC 2013

PRODUCED & PRESENTED BY WWW.GOSPELGUITAR.COM

FIND E-COPY AT THE GOSPELGUITAR WEBSITE

E-COPY

உள்ளே.....

வாழ்கையின் விளிம்பில்..... 02

ஒரே ஸ்ரெஸ்! (உளவழுத்தம்)..... 04

கொஞ்சம் யதார்த்தமாக பேசுங்கோ..... 07

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?..... 11

உள்ளான மனிதன்

உங்கள் ஜெபத்தேவைகளுக்கு

e-mail: innerman.info@yahoo.com

☎ 416.627.9848

வாழ்க்கையின் விளிம்பில்...

அவன் மாம்சம் அவனிலிருக்குமட்டும் அதற்கு நோவிருக்கும் அவன் ஆத்துமா அவனுக்குள்ளிருக்குமட்டும் அதற்குத் துக்கமுண்டு என்றான். (யோபு 14:22). இனி எனக்கு வாழ்கையில் மீட்சியில்லை, எனக்கு கொடுக்கப்பட்ட சந்தர்பங்களெல்லாவற்றையும் நான் பாழாக்கிவிட்டேன். எல்லாப்பக்கத்திலும் நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். என்னை நன்றாக புரிந்து கொள்ளக் கூடியவர்கள் யாருமில்லை என்ற சத்தம் இன்று தொனிக்கின்றதா? மௌனமாக உனக்குள் வாடிக்கொண்டிருக்கி ன்றாயா? வெளியிலே ஒரு சந்தோஷமான வாழ்க்கை போலவும் உள்ளே நாளாந்தம் மனத்தொய்வினால் மடிந்து கொண்டிருக்கும் நிலையில் இருக் கின்றாயா? எதிர் காலத்தை குறித்த பயம் உன்னை வாட்டுகின்றதா? நாட்களை வீணாக்கி வாழ்கையின் விளிம்பில் நிற்கின்றேன் என்று கருது கின்றாயா?

நத்தார் நாட்கள் நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் உனக்கு ஒரு நற்செய்தி! "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கி றவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந் தார்" (யோவான் 3:16). நீ மீட்படைய ஒரே வழி! உன் சமாதானத்திற்கு ஒரே விடை! நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று சொன்ன இயேசு இன்று உன்னை அழைக்கின்றார். உன் சொந்த பெலத்தில் வாழ்ந்தால் நீ நிம்மதி இழந்துவிடுவாய், கர்த்தராகிய இயேசுவே தஞ்சம் என்று நீ நம்பினால் இன்று உன் இரட்சணிய நாள்!

இயேசுக்கிறிஸ்துவினால் மன்னிக்கமுடியாத பாவம் ஒன்றுமில்லை. சில பிரச்சனைகளை நீயாக தேடிக்கொண்டிருக்கலாம், சில பிரச்சனைகள் உன்மேல் தொடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது தனாகவே வந்த பிரச்சனை களாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் பரவாயில்லை, உன்னையும் என்னையும் மீட்பதற்காகவே அதிசயமான தேவன், ஆலோசனை கர்த்தர், நித்தியபிதா, சர்வ வல்லமையுள்ளவர், சமாதான பிரபு இந்த பூமிக்கு வந்தார். இன்று நீ உன் வாழ்க்கையை இயேசுவிற்கு ஒப்புக்கொடுத்தால் நீ அறியாததும் உனக்கெட்டாததும், இந்த உலகம் கொடுக்க முடியாததுமான தேவ சமாதானத்தை நீ பெற்றுக் கொள்வாய். உன்னால் சுமக்கமுடியாத பாரத்தை வீணாக நீ ஏன் சுமக்கவேண்டும்? ஏன் மன அழுத்தத்தினால் மாண்டு போக வேண்டும்? இன்று கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவிடம் பின்வருமாறு சொல்லு,

"இயேசுவே என் வாழ்கையில் என்னுடைய சொந்த பெலத்தில் வாழ்ந்து

களைத்துப் போய்விட்டேன், இனி என்னால் ஒன்றுமே செய்யமுடியாத நிலையிலே உள்ளேன். என் உள்ளத்தை இன்று உம்மிடம் தருகின் றேன், இன்று என் உள்ளத்திலே வந்து என்னை வழிநடத்தும். ஆமென்"

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உன்னை ஆட்கொண்டு நடத்துவார்!



WORD PUZZLE

FIND SOME BIBLE BOOKS

E	Z	E	K	I	E	L	M	E	S	T	H
J	E	S	Z	B	M	U	A	E	O	S	E
O	O	X	A	R	H	A	M	S	N	E	H
B	T	H	O	A	A	A	R	A	M	Z	A
A	I	I	N	D	J	M	M	L	L	M	G
D	M	A	T	T	U	O	A	E	O	A	G
I	A	J	I	U	R	S	I	R	B	E	A
A	L	T	T	J	P	N	M	R	K	K	I
H	A	B	U	E	A	A	J	U	D	E	S
A	C	T	S	D	L	A	L	T	E	H	A
T	H	M	T	J	O	N	A	H	U	O	I
I	I	A	I	S	A	I	A	H	T	S	A
T	P	E	T	E	R	J	U	D	G	E	S
S	H	K	U	M	I	C	A	H	O	A	A

EZEKIEL, EXODUS, AMOS, OBADIAH, ACTS, JOB, HAGGAI, LUKE, JONAH, HOSEA, PETER, JUDGES, MICAH, ISAIAH, JAMES, MARK, RUTH, PSALM, DANIEL, JOEL, JOHN, TITUS, JUDE

ஒரே ஸ்ரெஸ்! (உளவழுத்தம்)

பொதுவாக எம் வாழ்கையில் எம்மைச் சூழ காணப்படும் காரியங்கள் யாவும் அதிமாகிவிட்டது என நாம் உணரும் போதும், அவை எமக்கு அளவுக்கு மீறிய சுமையாக இருக்கும் வேளைகளிலும், அதன் விளை வால் வரும் அழுத்தத்தை எம்மால் தாங்கமுடியுமா என ஏக்கமடைகி ன்றோம்.

எங்களுடைய உடல் நலத்திற்கு சவாலாகவோ அல்லது அச்சுறுத்தலா கவோ காணப்படும் எதுவுமே உளவழுத்தம் (ஸ்ரெஸ்) எனப்படும். சில உளவழுத்தங்கள் மனிதர்களை முன்னேறி செல்ல உந்துகின்றது என்றும் அது வாழ்கைக்கு நல்லது என்றும் சிலர் கருதுகின்றார்கள். உளவழுத்தம் இல்லாத வாழ்க்கை பரபரப்பற்றதும் குறிக்கோள் இல்லாததும் என்பது வேறு சிலரின் அபிப்பிராயம். எப்படியாக இருந்தாலும் எங்கள் சரீர சுகநிலையை அல்லது மனநிலையை மறைசூழ்ச்சியால் பாதிக்கும் எந்த காரணியும் வாழ்க்கைக்கு உதவாது.

உளவழுத்தத்தால் பலவிதமான பக்கவிளைவுகள் உண்டாகின்றது:

- குருதி அழுத்தம் கூடுகின்றது,
- சுவாச வட்டம் துரிதமடைகின்றது
- சமிபாட்டுத் தொகுதி மெதுவாகின்றது
- இதய துடிப்பு வீதம் அதிகரிகின்றது
- நோய் எதிர்ப்பு சக்தி குறைகின்றது
- தசைநார்கள் இறுக்கமடைகின்றது
- நித்திரை கொள்ளமுடியாது இருகின்றது

(ஆதாரம் - Medical News Today)

உளவழுத்தத்தை உண்டு பண்ணும் காரணிகள்:

- எங்கள் உணர்வுகளை துண்டிவிடும் வெளிக்காட்ட முடியாத; கோபம், துக்கம், குற்ற உணர்வு, தாழ்வு மனப்பான்மை
- உறவு சம்மந்தமான பிரச்சனைகள், ஆதரவு மற்றும் நட்பு குறைந்த வாழ்க்கை
- வாழ்க்கையை மாற்றும் சம்பவங்கள்: உயிர் இழப்பு, வேலை பறிபோகுதல், திருமணம், இடமாற்றம்.
- குடும்பத்தில் பிரச்சனை, சிறுபிள்ளைகளினாலும், வாலிப பருவத்தில் இருக்கும் பிள்ளைகளால் வரும் பிரச்சனை
- உங்கள் கொள்கைக்கும் வாழ்க்கை முறைக்கும் குடும்பத்தினால் ஏற்படும் முரண்பாடு

(ஆதாரம் - WebMD)

உளவழுத்தத்தை தணிப்பதற்கும், அதனால் பாதிக்கபட்டவர்களுக்கு உதவி செய்யவதற்கும் பல மருத்துவ வழி முறைகளும் உண்டு, இன்னும் பல ஸ்தாபனங்களும் இப்படியானவர்களுக்கு ஆதரவாக ஆலோசனை வழங்கி வருகின்றார்கள். எவ்வளவு தூரத்திற்கு அவை வெற்றியளிக்கின்றன என்பதை உறுதியாக கூறமுடியுமா?

- வெளிக்காட்டமுடியாத கோபம் எனக்கு பிறப்பில் இருந்தே வருகின்றதே, இதை எப்படி மாற்றிவிடுவது?
- என்னால் மற்றவர்களுடைய அறிவுக்கும் அந்தஸ்திற்கும் ஈடு கொடுக்கமுடியாமல் இருக்கின்றது, இவைகளை நினைத்து எனக்கு இடைவிடாத துக்கம்.
- என் உறவினர் மத்தியில் எனக்கு நல்ல மதிப்பும் இல்லை, நல்ல உறவும் இல்லை. எனக்கு உண்மையான நண்பர்களும் இல்லையே.
- எனக்கு அன்பானவர்கள் இறந்து விட்டது என் தவறா?
- இந்த திருமண சம்மந்தத்திற்குள் இவ்வளவு பிரச்சனை வரும் என்று யார் அறிவார்கள்?
- இந்த வேலை இவ்வளவு சிக்கலாக நிலைக்கு என்னை தள்ளும் என்று எப்படி எனக்குத் தெரியும்?
- என் பிள்ளைகள் இப்படியாக போவார்கள் என்று நான் நினைக் கவே இல்லையே?
- இந்த நட்புகளினால் எனக்கு பாதிப்பு வரும் என்று முன்கூட்டியே எனக்கு எச்சரிக்க யாரும் இல்லையே.
- இப்படியான ஒரு சிக்கலான குடும்பத்தில் பிறந்தது என் தவறா?

இப்படியாக பல கேள்விகள் எங்களுக்குள் எழுந்து வரலாம். இந்நிலை எங்கு எப்படி தொடங்குகின்றது? இந்த வலைக்குள் சிக்காமல் வாழ்வடையமுடியுமா? அறிந்தோ அறியாமலோ இப்படிபட்ட பிரச்சனைக் குள் சிக்கியிருந்தால் எப்படி வெளியேறலாம்?

இவைகளை முன்கூட்டியே உனக்கு அறிந்து கொள்ள ஒரு வழி உண்டு. பிழையான வழிக்கு உன்னை எடுத்துச் செல்லும் கூட்டுறவுகளை இனம் காண அல்லது வாழ்கையை கெடுக்கும் சம்பந்தங்களை தவிர்த்துக் கொள்ள ஒரே தேவனிடம் வழி உண்டு. அவர் சத்தத்தை கேட்டு அதன்படி செய்கின்றவன், கன்மலையின் மேல் தன் வீட்டை கட்டியவனுக்கு ஒப்பாவான். எந்தப் புயலும் அந்த இல்லத்தை உடைக்க முடியாது. ஆம்! இயேசு அதை இலவசமாக தர இன்று உன்னை அழைக்கின்றார்.

வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்தேயு 11:28) என்று இயேசு இன்று உன்னை அழைக்கின்றார். அவருக்குள் நீ உளவழுத்தம் இல்லாத நிம்மதியான வாழ்வை கண்டடைய முடியும்.

உலகத்தில் உபத்திரங்கள் உண்டு ஆனால் அவை யாவையும் ஜெயங்கொண்ட இயேசு இவைகளை மேற்கொள்ள எங்களுக்கும் வழி வைத்துள்ளார். எம் நிலை எப்படியாக இருந்தாலும் என்ன, எல்லாம் எம் கையில் தான் இருக்கின்றது. இயேசு இலவசமாக நிம்மதி தர காத்திருக்கிறார், நீ உன்னை ஒப்புக் கொடுக்க ஆயத்தமா?

உளவழுத்தம் இல்லாத வாழ்கையை குறித்து வேதாகமத்திலே பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்றிலும் சமாதானமான வாழ்வு தேவனிடம் உண்டு.

“கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல இருப்பார்கள். இதோ, கர்த்தருக்கு பயப்படுகின்ற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கபடுவான்” சங்கீதம் (128:1-4)

இதை வாசித்துக் கொண்டிருக்கின்ற உனக்கு சமாதானம் தேவையா? அது உன் கையில் தான் இருகின்றது. மத வைராக்கியங்கள், குடும்ப அந்தஸ்துக்கள், சமுதாய நற்பெயர், கல்வி அறிவு, மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணங்களும் உன்னை தடைசெய்யலாம். உனக்கு சமாதானம் தேவையா? முடிவெடுக்க வேண்டியது நீ தான்! இப்படியான சந்தர்ப்பம் இனி உனக்கு வராமல் போகலாம். இன்று உன் வாழ்க்கையை இயேசுவிடம் ஒப்புக்கொடு.



மருத்துவமனையிலோ, வீட்டிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க விரும்பினால், எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

e-mail: innerman.info@yahoo.com

☎ 416.627.9848

கொஞ்சம் யதார்த்தமாய் பேசுங்கோ!



விஞ்ஞானம், தொழில்நுட்பம், மனித அறிவு வளர்ந்த நாட்கள் இது ஆகவே கொஞ்சம் யதார்த்தமாக பேசுங்கோ! இந்தக் கதை நடைமுறைச் சாத்தியமற்றது! இவையாவும் கற்பனை! பைத்தியக்கார பேச்சு! நம்பமுடிய வில்லையே! விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்ட சம்பவம்!

இப்படியாக இவ்வுலகத்திலே மனிதர்கள் சொல்வதை கேட்கின்றோம். விஞ்ஞானம், தொழில்நுட்பம், மதம் மற்றும் மனித அறிவினால் வாழ்க்கைவட்டத்தை விளங்கிக்கொண்டு அதை கட்டுப்படுத்த மனிதன் முயல்கின்றான். ஆனால் ஆதியில் இருந்தது போல மனிதன் பிறக்கின்றான், வாழ்கின்றான், பின் இறக்கின்றான். மனித அறிவினால் ஒருவேளை வாழ்க்கை முறைமைகள் நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ மாறியிருக்கலாம், ஆனால் மனிதன் பிறப்பதும் இறப்பதும் மாறவில்லை.

நெப்போலியன் போனபார்ட், உலக பிரசித்தி பெற்ற சக்கரவத்தி தனது 52 வயதில் காலமானார். ஏன், இன்றும் கூட பல உலகபிரசித்திபெற்ற பலம் வாய்ந்த மனிதர்கள் அகால மரணம் அடைந்திருக்கின்றார்கள். உங்கள் கைகளில் தவழ்கின்ற ஐ-போன் உற்பத்தி செய்த கம்பனியில் ஒரு முக்கிய புள்ளியாக இருந்த "ஸ்டீவ் ஜோப்ஸ்" அவர்கள் வருடத்திற்கு, சம்பளமாக மட்டும் ஏறத்தாழ 1 மில்லியன் டொலர்களை பெற்று வந்த ஒரு கோடீஸ்வரன் என்று கூறுகின்றார்கள். அவரிடம் இல்லாத பணமா? தன்னுடைய 56 வது வயதில் கணையஞ் சார்ந்த புற்றுநோய் வியாதியினால் காலமானார்.

இப்படியாக பல உலக பிரசித்தி பெற்ற மனிதர்களும், கோடீஸ்வரர்களும், யாதார்தமாய் சித்தாந்தம் பேசுகின்றவர்களும் வாடகை வீட்டில் இருப்பதைப்போல சில காலம் இருந்துவிட்டு போய்விடுகின்றார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன் பரிசேயர் எனப்பட்ட யூத மதப்பிரிவினர் வேத பிரமாணங்களை தாங்கள் கண்டிப்பாக கடைப்பிடிப்பவர்கள் என்று தங்களையே மேன்மைபாராட்டி வந்தவர்கள், ஆனாலும் இவர்களில் பலர் உண்மையிலே சுயநீதியுள்ள மாயக்காரராக இருந்தார்கள்.

அக்காலத்திலே, இயேசுவும் அவருடைய சீஷர்களும் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்கள்.

சீஷர்கள்: போதகரே, இவன் குருடனாய் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ?

இயேசு: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்யத பாவமுமல்ல, தேவனுடைய கிரிகைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான்.

அந்தக்குருடன் ஆச்சரியத்தக்கவிதமாக இயேசுவினால் பார்வையடைந்தான். அயலகத்தோருக்கு இது ஒரு சாத்தியமற்ற சம்பவம்!



அயலகத்தோர்: இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்த வனல்லவா?

சிலர்: அவன்தான் என்றார்கள், **வேறுசிலர்**: அவனுடைய சாயலாக இருக்கின்றான் என்றார்கள்.

பார்வையடைந்தவன்: நான்தான் அவன் என்றான். இயேசு என்னை குணமாக்கினார் என்றான்.

அங்கிருந்தவர்கள் பார்வையடைந்தவனை, பரிசேயரிடம் கொண்டு சென்றார்கள்.

பரிசேயர்: நீ எப்படி பார்வையடைந்தாய் என்றார்கள்.

பார்வையடைந்தவன்: இயேசு என்னை குணமாக்கினார் என்றான்.

அதை பரிசேயரால் நம்பவே முடியவில்லை, அவனுடைய பெற்றோரை அழைத்து அவர்களை வினாவினார்கள்.

பரிசேயர்: உங்கள் குமாரன் குருடனாக பிறந்தானென்று சொல்லு கிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படி பார்வையடைந்தான்?

பார்வையடைந்தவனின் பெற்றோர்: இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய் பிறந்தான் என்றும் எங்களுக்கு தெரியும். இவன் இப்பொழுது பார்வையடைந்த வகையை இவனிடமே கேளுங்கள் என்றார்கள்.

பரிசேயருக்கோ இது ஒரு நம்பமுடியாத காரியம், அவர்கள் மறுபடியும் பார்வையடைந்தவனை கேள்வி கேட்டார்கள். பார்வையடைந்தவன்

அவர்கள் முன்னிலையில் நிற்பதால் இச்சம்பவம் நடக்கவில்லை என்று அவர்களால் சொல்ல முடியவில்லை.

பார்வையடைந்தவன்: பிறவிக்குருடனுடைய கண்ளை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.

பரிசேயர்: முழுவதிலும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்கு போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனை புறம்பே தள்ளிவிட்டார்கள்.



இதில் உண்மையான குருடர்கள் யார்?

ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிர பஞ்சத்தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில் லையா? (1கொரி 1: 20)

பரிசேயருக்கு இது யதார்த்தமாக தோன்றவில்லை. தங்களுடைய உலக ஞானத்தால் தேவ காரியங்களை அறிய முற்பட்ட இவர்கள் தங்கள் மனக்கண்களை குருடாக்கி விட்டார்கள். சரீரத்திலே பார்வையற்ற கல்வி அறிவில்லாத பிச்சையெடுப்பவனுக்கு, யாரால் இப்படிப்பட்ட காரியத்தை செய்யமுடியும் என சற்றும் ஐயமில்லாமல் கூறமுடிந்தது. ஏனென்றால் இரட்சணியத்தை அவன் கண்கள் கண்டது. ஆம்! இயேசுவை அவன் கண்டான்!

ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமான வைகளைத் தெரிந்து கொண்டார்: பலமுள்ளவைகளை வெட்கப்படுத்து ம்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளை தெரிந்து கொண்டார் (1 கொரி 1:27).

தேவன் இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினார். இவ்வுலகில் நன்கு கற்று தேறுவதில் தவறில்லை, ஆனால் இந்த உலக ஞானத்தை நம்பி எம் சொந்த அறிவிற்கு தேவ காரியங்கள் யதார்த்தமாய் தோன்ற வேண்டும் என எண்ணினால் உன் உள்ளான மனக்கண்ணை நீயே குத்திக் கொள்வாய். தேவ காரியங்களை உலக ஞானத்தால் விளங்கிக்கொள்ள முடியாது. தேவனால் வரும் நன்மையை கண்டடைய உன் யதார்த்த பேச்சை விட்டு இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

தேவ காரியங்களை அறிந்து கொள்ள தேவ ஞானத்தை பரத்திலிருந்து கேட்டு பெற்று கொள்.

குறுக்கெழுத்து...



இடம் இருந்து வலம்

1 பஞ்சாகமத்தின் முதல் ஆகமம் **5** உலக இரட்சகரின் நாமம் **6** செயலாற்ற முன் இதை செய் **7** இதுவும் வைராக்கியமும் மனதிலிருக்க கூடாது **9** வேதாகமத்தின் 5வது புத்தகம் **11** ஞாயிறு ஓய்வு நான் பாடசாலையில் கற்றான் **12** மேலிந்து கீழ் 10 – அதே சொல்லு **13** இப்புத்தி கூடாது என்று சொல்வார்கள் **14** இவர்கள் ஒரு வகை – ஒத்த சொல்லு **16** ஒருவரிடம் இருப்பதெல்லாம் – ஒத்த சொல் **18** இதை நாங்கள் ஆதயப்படுத்த வேண்டும் **20** செல்வம், சுகமும், இதுவும் ஒழிந்துபோம் **21** அலகையை ஜெயம் கொள்ளுதல்

மேலிருந்து கீழ்

1 தேவன் சதாகலமும் இதை செய்வார் **2** எகிப்தில் இருந்து வந்த விபரம் அடங்கிய புத்தகம் **3** சுகயீனத்தாலும் வரலாம், ஐஸ்வரியத்திலும் வரும் **4** இது படிந்த உள்ளம் வேண்டாம். **5** வருதப்பட்டு பாரம் சுமபவருக்கு இயேசு கொடுப்பது **8** பொன் இதில் சோதிக்கபட்ட பின் சுத்தமாகும் **9** இயேசு சிலுவையில் சிந்தினார் **10** ஆழமற்ற இடத்திலுள்ள நீரடி மணல்திட்டு **15** இவ்விடம் வந்தவர்களை இயேசு தள்ளமாட்டார் **16** இயேசுவிடம் இதை கொடுப்போம் **17** காற்றின் ஒரு வகை, புயல் போல் கடுமை இல்லை **19** சோதனையை சகித்த மனிதன்

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

தன்னுடைய சிறு வீட்டிலே, சராசரி வருமானத்துடன் வாழ்ந்து வந்த தாயானவளின் உலகமே அவளுடைய பிள்ளைதான். தன் பிள்ளைக்கு பற்கள் விழுந்து முளைக்கும் பருவத்தில், பிள்ளையினுடைய ஒரு பல் சிறிதளவு வரிசை தப்பி முளைத்துவிட்டது. தாய்க்கு ஒரே துக்கம், இந்த சிறிய பல்லு தன் பிள்ளையின் அழகான மழலை சிரிப்பை மாற்றிவிடப்போவதுடன், எதிர் காலத்தில் தன் பிள்ளையின் முக அழகை பாதிக்குமோ என்று ஒரே ஏக்கம். சக மாணவர்கள் மற்றும் நண்பர்கள் பிள்ளையை கிண்டல் பண்ணுவார்களோ என்ற கவலை. எப்படியாவது, எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தாகிலும், பல் வைத்தியரிடம் சென்று இந்த நிலையை மாற்ற வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள். பாருங்கள் தாயின் உள்ளத்தை, தன் பிள்ளைக்கு ஒன்றுங் குறையக் கூடாது என்று ஆசை. தான் என்ன பாடுபட்டாலும் பிள்ளை குறையின்றி வாழ வேண்டும் என்ற அளவுகடந்த அன்பு.

நவீன உலகத்திலே இன்று சிறார் மட்டுமல்ல, பெரியவர்களும் கூட தங்கள் தோற்றத்தையும், அழகைவும் மேம்படுத்த பல வழிகளை கையாளுகின்றார்கள். சிலர் பல ஆயிரக்கணக்கான டொலர்களை செலவு செய்து அறுவைச் சிகிச்சையின் மூலம் தங்கள் முக தோற்றத்தையே மாற்றி விடுகின்றார்கள். வேறு சிலர் கடும் உடற்பயிற்சியில் தங்களை வருத்தி எப்படியாயினும் தங்கள் உடல் சுகத்தையும் வெளிதோற்றத்தை மாற்றியமைக்க முயற்சிக்கிறார்கள். மற்றவர்களுக்கு முன்பாக தாங்களும் தங்கள் பிள்ளைகளும் அழகாய் காட்சியளிக்க வேண்டும் என்ற விருப்பம். ஒவ்வொருவரும் தங்கள் வசதிக்கும் நிலைமைக்கும் தக்கதாக வெளி தோற்றத்தை குறித்த விடயத்தில் செலவு செய்கின்றார்கள்.

ஆனால் அவ்வளவு ஆர்வம் எங்கள் உள்தோற்றதை குறித்து இருக்கின்றதா? எங்களிடமோ பிள்ளைகளிடமோ சில பிழையான பழக்கங்கள் இருக்கும் போது அதை மாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தை கவனித்து பார்ப்பீர்களானால், வெளித்தோற்றதிற்கு கொடுக்கும் முக்கியத்தும், உள்தோற்றத்தை குறித்த விடயத்தை விட மிஞ்சிவிடுகின்றது என்பதை நீங்கள் அவதானிக்க கூடியதாக இருக்கும்.

சற்று சிந்தித்து பாருங்கள், “மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகின்றதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், மனுஷனுடைய இருதயத்துக்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டதனங்களும், கபடும், கமாவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்.

பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப் படுத்தும் என்றார்" (மாற்கு 7:20-23).

யாருக்கு இதைக்குறித்த கவனம்? மற்றவர்களுக்கு தெரியாமல் இவைகள் உள்ளத்தில் மறைவாக இருந்தால் என்ன? அல்லது மற்றவர்களுக்கு வெளிப்படாத வகையில் கொஞ்சம் எட்டி வாழ்ந்தால் என்ன? வெளிப்படாத மறைபொருள் ஒன்றுமில்லையே! மனுஷன் முகத்தை பார்க்கின்றான் ஆனால் தேவனோ இருதயத்திலுள்ளதை ஆராய்ந்து அறிகின்றார். ஒரு மரத்தின் நிலையை அதின் கனிகளால் அறிவது போல, எங்கள் கனிகள் வெளிப்படும் போது யாவரும் உள் தோற்றத்தை அறிந்து கொள்ளவார்கள்.

எம் வாழ்கையிலே சரீரங்களை குறித்து அதிக கவனம் பெருகிகொண்டி ருப்பதை காண்கின்றோம். சரீரத்தை மட்டும் கொல்ல வல்லவர்களுக்கு மரியாதையுடன் கூடிய அதிக பயம் இருக்கின்றது. ஆனால் ஆத்துமாவை குறித்த கவனம் நாளடைவில் தணிந்து போகின்றதல்லவா? "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாதிதிரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்: ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத்தேயு 10:28)

உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம், மரணம், தேவதூதர்கள், அதிகாரங்கள், வல்லமைகள், நிகழ்காரியங்கள், வருங்காரியங்கள், உயர்வு, தாழ்வு, வேறெந்தச் சிருஷ்டி ஆகிய என்ன நிலையானலும் தேவனுடைய அன்பை விட்டு பிரியாமல், ஆத்துமாவை இவ்வுலக காரியங்களால் கறைப்படுத்தாமல் காத்து கொள்ளுபவர்களே தேவனுடைய சமூகத்தில் அழகாய் நிற்பார்கள்.

வேறு சிலரோ தங்கள் உடல்நிலையை குறித்த எந்தக் கவனமற்றவர்களாக வாழ்கின்றார்கள். உடல் சுக நிலையை பேணுவது மிகவும் அவசியம் ஆனால் வெளிதோற்றத்தை மேம்படுத்த எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ, அதற்கு மேலாக உள்தோற்றத்தை குறித்து இன்னும் அதிக கவனமுடையவர்களாக வாழவேண்டும். இம்மைகேற்ற காரிங்களையும், இருதயத்திலிருந்து வரும் பொல்லாத தோற்றங்களையும் ஜெயங்கொள்ள சொந்த பெலன் போதாது.

"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்: நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? (1 யோவான் 5:4-5).

SUPPORTED BY

GRACE TABERNACLE APOSTOLIC CHURCH

வழக்கமான சபை ஆராதனைகள்

CHURCH REGULAR SERVICES

ஞாயிறு சிறுவர் ஓய்வு நாள் படசாலை
Sunday School ..... 9:00 AM
(மாதத்தின் முதல் ஞாயிறு சிறுவர் பாடல் பயிற்ச்சி
First Sunday of the month – Children Choir Practice)

ஞாயிறு காலை ஆராதனை
Sunday Morning Service.....10:00 AM

துதியும் ஜெபமும் செவ்வாய் கிழமை மாலை
Worship and Prayers Every Tuesday..... 7:30 PM

உபவாச ஜெபமும், வேதப்படிப்பும்
மாதந்தோறும் இரண்டாம் சனிக் கிழமை காலை
Fasting & Prayers
2nd Saturday of the month..... 10:00 AM

பெண்கள் சங்கிலி ஜெபம்
ஒவ்வொரு வியாழக்கிழமையும்
Chain Prayers by Ladies
Every Thursdays start at .....8:30 AM

ஜெபம் – தெய்வீக சுகமும் விடுதலையும்
2ம் 4ம் வெள்ளி கிழமைகளில் மாலை
Prayers – Divine Healing and Deliverance
2nd and 4th Fridays.....7:30 PM

210–807 சில்வர் ஸ்டார் புலவட்
[மிட்லாண்ட் அவென்யுவில் பின்ச் வீதிக்கு சற்று வடக்கே]

210 Silver Star Blvd., Unit 807, Scarborough, Ontario
(On Midland Avenue, One Block North of Finch)

www.gtachurchnet.ca ☎ 416.613.2909